செ.வெ.எண்: 66 நாள்:26.08.2019

## கோயம்புத்தூர் மாவட்டம்

# மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று(26.08.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரை முருகன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.பிரபாகரன், உதவி இயக்குனர்(நில அளவை) திரு.தவமணி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.குமரேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி.மணிமொழி, மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து முதியோர் உதவித்தொகை, பட்டாமாறுதல், புதிய குடும்ப அட்டை, வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த 470 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி குறித்த காலத்திற்குள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து, வேளாண்மைத்துறையின் ஆத்துமா திட்டத்தின் கீழ் மண்புழு உரம் படுக்கை ஒரு பயனாளிக்கு, தென்னை மரம் ஏறும் கருவிகள், இரண்டு பயனாளிக்கு, சூரிய விளக்கு பூச்சிப்பொறி கருவிகள் இரண்டு பயனாளிகளுக்கு என மொத்தம் 5 பயனாளிகளுக்கு தலா 4000/- வீதம் ரூ.20,000/- மதிப்பிலும், தோட்டக்கலைத்துறையின் கீழ் வெண்டை விதைகள், உழவு, உரம், இடு பொருட்கள் சாகுபடி உள்ளிட்டவைகளுக்கு 3 பயனாளிகளுக்கு தலா 20,000/- வீதம் ரூ.60,000/- மதிப்பிலும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ்

14 பயனாளிகளுக்கு உதவி தொகை பெரும் ஆணையும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 12 பயணாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் இலவச தையல் இயந்திரம் இரண்டு பயனாளிகளுக்கு தலா ரூ.3573 வீதம் ரூ.7,146/- மதிப்பிலும் என மொத்தம் ரூ.87,146/- மதிப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை வழங்கினர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்.**